செய்தி வெளியீடு எண். 47-2017 நாள்: 24.06.2017

## விழுப்புரம் மாவட்டம் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவைபுரிந்தவர்களுக்கு, சுதந்திர தின நாள் விருதுகள் வழங்கிட தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

******

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவைபுரிந்தவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், கோட்டை கொத்தளத்தில், சுதந்திர தின நாள் விருதுகள் 15.08.2017 அன்று வழங்கப்பட உள்ளது. இவ்விருது பெறுபவர்களுக்கு 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. எனவே,

1) மாற்றுத்திறனாளிகளுக்கு மிக அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்த தனியார் தொழில் நிறுவனம்.

2) மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனம்

3) மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த சமூகப்பணியாளர்

4) மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த மருத்துவர்

ஆகிய விருதுகளுக்கான விண்ணப்பங்கள் பெறுவதற்கு, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விழுப்புரம் (தொலைபேசி எண்.04146 225543) என்ற முகவரியில் தொடர்பு கொண்டு, விண்ணப்பங்கள் பெற்று, புகைப்படங்கள் மற்றும் சான்றுகளுடன் பூர்த்தி செய்து, 30.06.2017 மாலை 05.00 மணிக்குள் சமர்ப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.